மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொதுப் பிரிவும் குடும்ப நலப் பிரிவும் தனித் தனியாக இயங்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அதுபோல் இயங்க வேண்டுமென்று தான் முதலில் அதற்கான திட்டத்தை வைத்தார்கள். பின்னால் இரண்டும் இணைந்து செயல் படுவதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதிய காரணத்தால் அதைப் பிரிக்காது இணைந்தே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

(வேலூர் கிருஸ்தவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.)

*வினா எண் 40—திரு. வி. கே. கோதண்டராமன்; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் சி. எம். சி. ஆஸ்பத்திரியில் கழிவுப் பொருட்களை எரிப்பதற்கு ராட்சத அடுப்பு உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) 18—3—1979-ம் தேதி சரியாக எரியாத நிலையில் இரண்டு பிணங்கள் இருந்ததை வேலூர் போலீஸ் அதிகாரிகள் போய்ப் பார்த்தது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(ஈ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) வேலூர் சி. எம். சி. தனியார் மருத்துவ மனையில் உள்ள இராட்சத அடுப்பில் காணப்பட்ட உடல்கள் 27 வயதான தொழு நோயாளி திருமதி சாவித்திரி என்பவருடையதும், 9 வயதான மிகிர்குமார் பிஸ்வால் என்ற சிறுவனுடையதும் ஆகும். கரிகிரி மருத்துவ மனையில் தொழு நோயின் காரணமாக மரணமடைந்த சாவித்திரியின் உடல் சி. எம். சி. மருத்துவக் கல்லூரி மாணவர்களின் பரிசோதனைக்குப் பிறகு சவக்கிடங்கில் வைக்கப்பட்டது. சி. எம். சி. மருத்துவமனையில் சிகிச்சை செய்ய அனுமதிக்கப்பட்டு 15—3—1979-ம் தேதி மரணமடைந்த சிறுவன் மிகிர்குமார் பிஸ்வாலின் உடலும் சவக்கிடங்கில் வைக்

கப்பட்டது. இவற்றுடன் நாகராசன் என்ற ஆறு வயது சிறுவனுடைய உடலும் சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்தது. சி.எம்.சி. மருத்துவமனையினை அட்டெண்டர் சாவித்திரி நாகராசன் இவர்களின் உடல்களை பாலாற்றங்கரையில் புதைப்பதற்கு பதிலாக சாவித்திரியின் உடலுடன தவறுதலாக சிறுவன் மிகிர்குமார் பிஸ்வாஸின் உடலையும் இராட்சத அடுப்பில் போட்டு விட்டார். அடுப்பில் போதுமான தீ இல்லாததால் இவ்விரு உடல்களும் சரியாக எரியாத நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

(ஈ) இத்தவறுகளுக்குப் பொறுப்பான சி.எம்.சி. மருத்துவமனை அட்டண்டர் திரு. முருகேசன் நிர்வாகத்தினரால் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். வழக்கு காவல் துறையின் விசாரணையில் உள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்த ராட்சத அடுப்பில் கழிவுப் பொருட்களை எரிக்கக்கூடிய காரணத்தால், அந்த துர்நாற்றத்தால் அங்கு உள்ள மக்களுக்கு அடிக்கடி பல விதத்திலே தொல்லைகள் ஏற்படுகின்றன என்ற காரணத்தால் நகரத்திற்கு வெகு தூரத்திற்கு அப்பாலே அதை அமைக்க வேண்டுமென்று நீண்ட காலமாக அந்த மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பது அமைச்சருக்குத் தெரியுமா? இப்படி அடிக்கடி ஏற்படுகிறது. அந்த ராட்சத அடுப்பிலே பிணத்தைப் போட்டு எரிக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அந்த ஆஸ்பத்திரியிலே ராட்சத அடுப்பை வைப்பதற்குப் பதிலாக நகரத்திற்கு அப்பாலே அதை வைக்கவேண்டுமென்று அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவாகளே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததை கருத்தில் கொண்டு அந்த நிர்வாகத்திடம் பேசி அவர் மீது உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கான வழிவகைகள் செய்யப்படும்.

Co-operative Sugar Factory near Tiruttani

*Q. No. 40. அ- THIRV A. EKAMBARA REDDY: will the Hnerable Chief Minister be pleased to state—

(a) whether the proposal to start a Co-operative Sugar Factory at Arungolam near Tiruttani has been approved and received by the State Government; and

(b) if so, the present stage thereof?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்)

(அ) மற்றும் (ஆ) சர்க்கரை உற்பத்திக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ஏற்கெனவே அடையப்பட்டு விட்டதால், திருத்தணி வட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவுவதற்கான உரிமம் வழங்கும் குறிப்பை மைய அரசு ஒத்தி போட்டு விட்டது.